**செய்தி வெளியீடு எண்:578** **நாள் :13.11.2014**

## முதலமைச்சர் கோப்பைமாநிலவிளையாட்டுப் போட்டிகள்

## முதலமைச்சர் கோப்பை, ரொக்கப் பரிசுமற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைஅமைச்சர் டாக்டர் எஸ். சுந்தர்ராஜ் அவர்கள் வழங்கினார்

தமிழகத்தில் இளைஞர்களை விளையாட்டுக்களில் ஈடுபடுத்திடவும், அனைத்து விளையாட்டுவீரர்கள்மற்றும் வீராங்கனைகளைஊக்குவிக்கவும்,முதன்முறையாகமுதலமைச்சர் கோப்பைக்கானவிளையாட்டுப் போட்டியினைஇருபாலருக்கும் நடத்திமுதலமைச்சர் கோப்பை, ரொக்கப் பரிசுமற்றும் சான்றிதழ்கள் ஆகியவற்றைவழங்க ரூ.8.09 கோடி நிதி ஒதுக்கீடுசெய்து, 11.3.2012 அன்று மாண்புமிகுமுதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

அதனடிப்படையில்,மாவட்டஅளவில்விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, போட்டிகளில்வெற்றி பெற்ற204 விளையாட்டுவீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்குமுதல்பரிசாகதலா ரூ.1000 வீதம் ரூ.2,04,000/–, 204 விளையாட்டுவீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு இரண்டாம் பரிசாகதலா ரூ.750 வீதம் ரூ.1,53,000/–, 204 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மூன்றாம் பரிசாகதலா ரூ.500 வீதம் ரூ.1,02,000/–, ஆக 612 விளையாட்டுவீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு மொத்தம் ரூ.4,59,000/–ரொக்கப் பரிசுகள்வழங்கப்பட்டது.

மாவட்டஅளவில் வெற்றி பெற்றவீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 4 மண்டலங்களில் (திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை) நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற204 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு முதல் பரிசாக தலா ரூ.5,000 வீதம் ரூ.10,20,000/–, 204 விளையாட்டு வீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு இரண்டாம் பரிசாகதலா ரூ.3,000 வீதம் ரூ.6,12,000/–, 204 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மூன்றாம் பரிசாகதலா ரூ.2,000 வீதம் ரூ.4,08,000/–, ஆக 612 விளையாட்டு வீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு மொத்தம் ரூ.20,40,000/–ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டது.

மண்டலஅளவில்வெற்றி பெற்ற 1632 விளையாட்டுவீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு, சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில், முதலமைச்சர் கோப்பைக்கானமாநிலப் விளையாட்டுப் போட்டிகளான,பத்துவிளையாட்டுப் போட்டிகளை,இருபாலருக்கும் 11.11.2014 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைஅமைச்சர் டாக்டர் எஸ். சுந்தர்ராஜ் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தடகளம், கையுந்துப்பந்து, கால்பந்துமற்றும் மேசைப்பந்துவிளையாட்டுப் போட்டிகளும், நேரு உள்விளையாட்டரங்கில் கபடி, கூடைப்பந்து (திறந்தவெளிகூடைப்பந்துமைதானம்) மற்றும் இறகுப்பந்துவிளையாட்டுப் போட்டிகளும், ஒய்.எம்.சி.ஏ. நந்தனம் விளையாட்டுமைதானத்தில் வளைகோல்பந்துபோட்டியும், டென்னிஸ் விளையாட்டரங்கில் டென்னிஸ் போட்டிகளும் மற்றும் வேளைச்சேரியில்உள்ளநீச்சல்குளவளாகத்தில்நீச்சல்போட்டிகளும்நடைபெற்றது.

13.11.2014 அன்றுநேருஉள்விளையாட்டரங்கில் மாலை 5.00 மணிக்கு நிறைவுவிழா நிகழ்ச்சியில் மாநில அளவில்வெற்றி பெற்ற204 விளையாட்டு வீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு முதல்பரிசாகதலா ரூ.1,00,000 வீதம் ரூ.2,04,00,000/–, 204 விளையாட்டுவீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு இரண்டாம் பரிசாகதலா ரூ.75,000 வீதம் ரூ.1,53,00,000/–, 204 விளையாட்டுவீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு மூன்றாம் பரிசாகதலா ரூ.50,000 வீதம் ரூ.1,02,00,000/–, ஆக 612 விளையாட்டு வீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு மொத்தம் ரூ.4,59,00,000/–ரொக்கப் பரிசு,முதலைச்சர் கோப்பைமற்றும் சான்றிதழ்கள் ஆகியவற்றை மாண்புமிகுஇளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைஅமைச்சர் டாக்டர் எஸ். சுந்தர்ராஜ் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அரசுமுதன்மைச் செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசுச்செயலர், திரு முகமதுநசீமுத்தின், இ.ஆ.ப. மற்றும் தமிழ்நாடுவிளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மைச் செயலர் / உறுப்பினர் செயலர் திரு வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப. அவர்கள்மற்றும் விளையாட்டுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**